REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 11உ திங்கள் (26—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 12உ செவ்வாய் (27—11—56) [இதழ் 144

கோர்பா நிலக்கரித்திட்டம்

கருவிகள் வாங்க ரூ. 5 கோடிக்கு ஆர்டர்

புதுடில்லி, நவ. 25—

கோர்பாவில் அமைக்கப்படும் நிலக்கரித் திட்டத்திற்கு தேவையான கருவிகளை விநியோகம் செய்ய வெளிநாடுகளில் ரூ. 5 கோடிக்கு ஆர்டர் தரப்பட்டுள்ளதாம்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 5 ரஷ்ய நிபுணர்கள் இந்தியா வந்துள்ளனர்.

'படுகோரமான இரயில் விபத்து'

தபால் ஊழியரிடை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் முழக்கம்

'இரயில், தபால் துறைகள் நாட்டின் நரம்புகள்'

'நரம்புத் தளர்ச்சி நாட்டுக்குக்கேடு'

'அதிருப்தியான நிலையில் ஊழியர்களிருக்கக் கூடாது'

தபால் ஊழியர்களிடை, 23-11-56 அன்று மாலை பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"தொழிற்சங்கங்களைக் கொழுகொம்பாக வைத்து, அரசியல் கட்சிகள் அதில் படரும் கொடிகளாயிருக்கக் கூடாது என்று வற்புறுத்திவருபவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள்!

"தொழிலாளருக்கு அரசியல் பற்று நிச்சயம் இருக்கவேண்டும்.

"ஆனால் அவர்கள் தங்களின் அரசியல் கருத்துக்களை தொழிற் சங்கங்களில் நுழைத்து, தொழிற் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தினைப் பாழடிக்கக் கூடாது.

"தொழிற்சங்கத்தில், சங்கம் சம்பந்தமான விஷயங்களை மட்டுமே பேசவும் எண்ணவும் இருக்க வேண்டும். வெளியே வந்ததும், அவரவர்களுக்குப் பிடித்தமான அரசியல் கட்சிகளுக்குப் பணியாற்றவும், தங்கள் நேரம்—நினைப்பு—உழைப்பைச் செலவிடவும் செய்யலாம்.

"இதைவிடுத்துத் தொழிற்சங்கத்திற்குள்ளேயே அரசியல் கருத்துக்களைப் பற்றிப் பேசத் துவங்கினால், அது தொழிற்சங்க நலனுக்கு உகந்ததாயிராது. வெளியில் அரசியல் கட்சிகளிடை உள்ள மாச்சரியங்கள், கருத்து வேறுபாடுகள் இவை தொழிற்சங்கத்திற்குள்ளும் தலை தூக்க ஆரம்பிக்கும்.

"வெள்ளைக்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் சண்டை என்றால், அதன் எதிரொலி சென்னையிலும் புதுச்சேரியிலும் கேட்குமாம். அதேபோலத்தான், வெளியில் காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் நல்லுறவு இல்லை என்றால், தொழிற்சங்கத்திற்குள்ளும் அந்தச் சீர்கெட்ட நல்லுறவின் எதிரொலி கேட்கும். விளைவு தொழிற்சங்கம் அமைதியாக வேலை செய்ய முடியாது.

"ஆனால், தபால்-தந்தி ஊழியர் சங்கம், பிற தொழிற் சங்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, எந்த ஒரு கட்சியின் ஆதிக்கத்திலுமின்றி இந்தத் தொழிற்சங்கம் இருந்து வருகின்றது.

"இந்த நாட்டை ஒரு உடலுக்கு ஒப்பிட்டால், தபால்-தந்தி, மற்றும் இரயில்வே ஆகிய இரு துறைகளையும், நாட்டின் நரம்புகளுக்கு ஒப்பிடலாம்.

"இந்த நரம்புகள் சரிவர இயங்கினால்தான் நாடு அசையும்; இயங்கும்; நடமாடும் நரம்புகளில் கோளாறு ஏற்பட்டால், உடம்புக்குக் கேடுதான்!

"நரம்புகள் சரிவர வேலை செய்யாதவர்களுக்கு 'சொரணை' இருப்பதில்லை. அதேபோல், தபால்-தந்தி, இரயில்வே இவை சரிவர இயங்காவிட்டால் அந்த நாட்டை சொரணை கெட்ட நாடாகக் கருதுவார்கள்.

"நரம்புகள் தளர்ந்துவிடாமல், கோளாறுகளுக்கு ஆளாகிவிடாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

"இன்று, நாட்டின் இந்த நரம்புகள் தளர்ந்திருக்கின்றன; கோளாறுடையதாயிருக்கின்றன. எனவே, இதனைச் சரிசெய்ய நல்ல 'டானிக்' வேண்டும் என்று சங்கத்தவரின் கோரிக்கைகள் கூறுவதாயுள்ளன.

"ஒரு பார்சல் சென்னையிலிருந்து டில்லி செல்ல 30 நாட்கள் ஆகின்றன, இங்கு!' என்று ஒரு அமெரிக்கர் சில நாட்களுக்கு முன்பு என்னிடம் கூறினார். அந்த வருந்தத்தக்க நிலை இருக்கிறது—நரம்புகள் தளர்ந்திருக்கின்றன; இவை சரிசெய்யப்பட்டாக வேண்டும். அதற்கு, நரம்புகளாயிருக்கிற இரயில்வே, தபால்-தந்தி ஊழியர்கள், அதிருப்திகரமான வாழ்க்கை நிலையில் இருத்தலாகாது.

"முன்னைவிட இப்போது நமது தேவைகள் பலமடங்கு பெருகியுள்ளன பெருகிவரும் இந்தத் தேவைகளைப்பூர்த்தி செய்ய, இந்த நாட்டு வளம் இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டாக வேண்டும்.

"ஒரு காலத்தில், 'சொல்லுவதைச் செய்யவேண்டும்; கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்ற நிலை தொழிலாளருக்கு இருந்தது!

"கீழ்காலத்தில், 'இவ்வளவு தான் செய்வேன்; என் உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடு' என்று உரிமையோடு கேட்கிற நிலை இருக்கிறது.

"இனி எதிர்காலத்தில், இங்கு, 'எனது தேவைகள் இவ்வளவு; ஆனால், என்னுடைய சக்திக்கேற்ப மட்டும உழைப்பேன்; தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்' என்ற நிலை மலருதல் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

"உலகில் மனிதர்கள் அவரவரின் அறிவு, ஆற்றல், உழைப்பு இவை ஒருபடியாய் அமைவதில்லை; தேவைகள்தான் ஒருபடியாயுள்ளன. எனவே, எல்லோரது தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; சக்திக்கேற்ப எல்லோரும் உழைக்க வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

"தபால் ஊழியர்கள் தங்கள் உரிமைகளை வற்புறுத்தும் போதே, கடமையையும் தவறாது செய்பவர்களாவர்.

"அவர்கள், நாட்டு நிலைகளில் தங்களுக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்து, தொடர்ந்து நாடு வளரவும், அதனால் தாங்கள் வளரவுமாகப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"45 இலட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாயுள்ளன; 3 கோடி தமிழர்தம் தாய்மொழி, ஆட்சி மொழியாகக்கூடாதா?

"எதிர்காலத்தில், எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தமிழ் ஆட்சி மொழியாகத்தான் போகிறது.

"3 கோடி தமிழருக்கு, அஞ்சல் அட்டைகள், பணம் அனுப்பும் 'ஃபாறு'க்கள் எல்லாம் தாய்மொழியில் இருக்கக் கூடாதா? தபால் ஊழியர்கள் தாயக மக்களின் இந்த ஆசையைக் கண்ணுற்று வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

'தமிழ்நாடு' எனப்பெயரிடுமாறுகோரி

திருப்புத்தூரில் 22 வயது இளைஞர் உண்ணாவிரதம்

திருப்புத்தூர் நவ. 23—

"சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிடுமாறும், பெயரிடும் நாளை திட்டவட்டமாய் சென்னை மாநில அரசாங்கம் அறிவித்துவிட வேண்டுமென்றும் கோரி இராபர்ட் எனும் 22 வயதுள்ள இளைஞர், இவ்வூர் பஸ் நிலையத்திற்கருகே உள்ள பிள்ளையார் கோவில் முன்பாக 22-11-56 முதல் உண்ணாநோன்பு மேற்கொண்டிருக்கிறார்.

"திருப்புத்தூர் தாசில்தார் அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்."

என்று, திருப்புத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) தி. மு. கழகச் செயலாளர் கா. காத்தமுத்து அறிவிக்கிறார்.

சவுக்குத் தோப்புகளிலிருந்தும் பிணங்கள் எடுக்கப்பட்டன

அரியலூர் சோகக் காட்சி குறித்து திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அம்பில் தருமலிங்கம் தகவல்

சென்னை, நவ. 26—

"24—11—56 அன்று சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரிற்சென்றேன். இதுவரை தமிழ் நாட்டிலேயே இதுபோன்ற இரயில் விபத்து ஏற்பட்டிருக்காது என்றுதான் சொல்லவேண்டும். பிழைத்தவர்கள் எண்ணிக்கையைத்தான் சொல்லவேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும், எப்படியும் சொல்ல முடியாது.

"இன்றுவரைதான் பிணங்களையும் எடுக்கமுடியும். நாளையுடன் பிணங்களை எடுக்கமுடியாது; ஏனெனில் இன்றே அந்த இரயிலை ஓட்டிவந்த டிரைவரின் உடலில் பாதியை இடுப்பிற்குக் கீழ் வெட்டி எடுத்தார்கள்; நானே அருகில் இருந்து பார்த்தேன்.

"இன்னும் எஞ்சினை அடுத்து உள்ள மேல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தவர்களின் உடல்களை எடுக்க இயலாத வகையிலுள்ளது.

"பெண்கள் வண்டியைப் பற்றியத் தகவலே சரியாகத் தெரியவில்லை.

"சில பிணங்கள் சுமார் 2 பர்லாங் தூரம் சவுக்குத் தோப்பில் தேங்கி இருந்து எடுக்கப்பட்டன.

"பாலத்திலிருந்து வண்டிகள் விழவில்லை; பாலத்தைத் தாண்டியதும் எஞ்சின் விழுந்துவிட்டது; சாய்ந்த எஞ்சின் தரையில் விழ்வதற்குள் இரு பெட்டிகள் அதனடியில் அகப்பட்டுக்கொண்டன; மூன்றாவதாக ஒரு பெட்டியும் சேர்ந்து எஞ்சினுக்கடியில் நசுங்கியிருக்கின்றன; மூன்று பெட்டிகள் உருத்தெரியாமல் சிதறிவிட்டன.

"நிவாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன; கழகத் தோழர்கள் தம்மாலான பணிகளைச் செய்துவருகிறார்கள்; நானும் உரிய அதிகாரிகளைக் கண்டு நிவாரணத்திற்கான பணிகளைத் துரிதமாக செய்வதில் ஈடுபட்டு வருகிறேன்,"

—என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் அன்பில்-தருமலிங்கம் அவர்கள் தகவல் தந்திருக்கிறார்.

மோசமான விபத்து

'எண்ணிப்பார்க்க முடியாத அளவு மோசமான—படுகோரமான விபத்து' என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

இன்னும் தோண்ட வேண்டியது!

இன்னும் தோண்டி எடுக்க வேண்டியுள்ள பிணங்கள் எத்தனை இருக்கும் என்று கூறுவதற்கில்லை.

ஒரு முதல் வகுப்பு வண்டியும், மூன்றாம் வகுப்புப் பெண்கள் வண்டி ஒன்றும இன்னும் ஆற்றிலிருந்து வெளியே எடுக்கப்படவில்லை.

இதுவரை 145

இதுவரை தோண்டி எடுக்கப்பட்டுள்ள பிணங்களின் எண்ணிக்கை 145 என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இறந்த ஊழியர்களின் மனைவிகளுக்கு நஷ்டஈடு!

இரயில் விபத்தில் உயிர்நீத்த இரயில்வே ஊழியர்தம் விதவைகளுக்கு உடனடி நிவாரணமாக ரூ. 250 தருமாறு திருச்சி பிரிவு இரயில்வே அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

விசாரணை ஆரம்பம்

சர்க்கார் இரயில்வே இன்ஸ்பெக்டரான டி. சி. தேசாய் என்பார் நேற்று பிற்பகல் அரியலூரில் விசாரணையைத் துவக்கியுள்ளார் என்று தெரியவருகிறது.

இன்னும் மூன்று நாட்களுக்கு விபத்து விசாரணை அங்கு நடைபெறும் என்றும், விசாரணையின் போது பத்திரிகையாளர் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், விசாரணை செய்பவர்களிடத்தில் சாட்சியம் கூற விரும்புபவர்களுக்கு இலவச இரயில் வசதி தரப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'வழிகாட்டிக் கருவி'கள் தயாரிக்கும் தொழிற்சாலை

கோரக்பூர், நவ. 26—

2-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் ஆமதாபாதில்சபர்மதி என்னும் இடத்தில் இரயில்வே 'வழிகாட்டிக் கருவி'களை தயாரிக்கும் ஒரு புதிய தொழிற்சாலையை ரூ. 25 இலட்சம் செலவில் ஏற்படுத்துவதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

நம் நாடு

சென்னை 26—11—'56 திங்கள்

ஆறுதல் பெறுவீர்!

அந்தகோ! தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தூத்துக்குடி துரிதப் புகைவண்டி, அரியலூர் அருகில் ஓடிக்கொண்டிருக்கும் மருதையாறு பாலத்தின்மீது செல்லத் தொடங்கியதும், எஞ்சினும் ஏழு பிரயாணிகள் பெட்டிகளும் ஆற்றில் விழுந்துவிட்டனஎன்ற சோகச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அந்தக் கணமே இறந்தவர்கள் தொகையும் படுகாயம் அடைந்துள்ளவர் எண்ணிக்கையும் நூற்றுக்கணக்காகிவிட்டிருக்கிறது.

எதிர்பாராவகையில் ஏற்பட்டுவிட்ட இப்பெரும் விபத்திற்கு இந்தியப் பேரரசு சரியான விளக்கம் தந்தாக வேண்டும். மருதையாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாலம் பழுதுபட்டுவிட்டிருக்கக்கூடும் என்றும் அதன் எதிரொலியே இக்கோர விபத்திற்குப் பெரிதும் காரணம் என்றும், இந்தியப் பேரரசு கூறிவிடுவதின் மூலம், இறந்தவர்களை எண்ணி எண்ணி வாட்டமுற்றுக் கிடக்கும் அவர்களின் உற்றார் உறவினர்களுக்குச் சாந்தியைத்தந்துவிட முடியாது.

அண்மையில்தான், பழுதுபட்ட பாலத்தின்மீது புகைவண்டி சென்றதின் காரணமாக, முன்னாள் ஐதராபாத் மகபூப் நகரில், அரியலூர் அருகில் நிகழ்ந்துள்ளதைப்போன்ற பெருத்த ஓர் விபத்து ஏற்பட்டது. அவ்விபத்து குறித்து எழுந்த வேதனை ஒலி ஒடுங்குவதற்குள்ளாக, அரியலூர், மரண ஓலமிட முன்வந்து இருக்கிறது.

இவ்விரண்டு போன்றே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும், ஜான்கோன் என்ற இடத்தில் ஏற்பட்ட புகைவண்டி விபத்தும், பழுதுபட்ட பாலத்தின்மீது வண்டி சென்றதின் விளைவேயாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று பெரும் விபத்துக்களும் எதைக் காட்டுகின்றன? மக்கள்மீது இந்தியப் பேரரசு கொண்டுள்ள நல்லெண்ணத்தையா?

ஒவ்வொரு விபத்து நிகழும் போதும், 'இத்தகைய விபத்து ஏற்படவிடாமல் பார்த்துக் கொள்ளுகிறோம்; விபத்துகளைத் தடுக்கும் சிறந்த முறைகளை மேற்கொள்ளுகிறோம்' என்றுதான் இந்தியப் பேரரசின் சார்பில் ஆறுதல் கூறப்பட்டு வருகிறது. ஆனால் ஆறுதல் கூறும் ஒன்றை மட்டுமேதான் விபத்துகளைத் தடுக்கும் நல்ல முன்னேற்பாடாக இந்தியப் பேரரசு கையாண்டு வருகிறதோ என்ற ஐயப்பாட்டை, தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு வருவதைக் கொண்டு உறுதி செய்ய வேண்டியதாகிறது.

அரியலூரில் விபத்து எப்படி ஏற்பட்டது; பாலத்தில் பழுது ஏற்பட்டதுதான் காரணமா? என்பதை ஆராய்ந்து அறிவதுடன் இந்தியப் பேரரசு இருந்துவிடக் கூடாது. அதன் கடமை அந்த அளவுடன் நின்றுவிடக்கூடியதன்று.

அரியலூர் பெரும் விபத்திற்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்தாக வேண்டும். அதுமட்டுமன்றி, ஏனைய வாழ்க்கை வசதிகளையும் துளியும் தயக்கம் காட்டாது தாராளமாகச் செய்துதர இந்தியப் பேரரசு முன்வர வேண்டும்.

அப்பொழுதுதான், விபத்துக்களைத் தடுக்கக்கூடிய திறமை இந்தியப் பேரரசிற்கு இல்லை என்றாலும், விபத்தில் சிக்கி இறந்தவர்களின் குடும்பங்கள் மீது பரிவு காட்டும் போக்கு இருக்கிறது என்பதையாவது காட்டிக் கொண்டதாகும். விபத்து நடந்த இடத்திற்கு விரைந்துள்ள போக்குவரத்துத் துணை அமைச்சர், இவ்வகையில் நேரிய நியாயம் வழங்குமாறு இந்தியப் பேரரசை வலியுறுத்திக் கூற வேண்டும் என்று கோருகிறோம்.

கோர விபத்துக்குப் பலியாகி உயிர்நீத்த மக்களுக்கு நமது இதயபூர்வமான துக்கத்தையும் அவரவர் குடும்ப மக்களுக்கு நமது ஆறுதலையும் உரிமையாக்குகிறோம்.

புதுவையில் கட்டப்படும் கப்பல் துறை

அமைப்பில் ஒரு கண்ணோட்டம்

புதச்சேரியில் சுமார் ரூ. 35-இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் கப்பல் துறை, கரையிலிருந்து 1,200 அடி தூரம் வரை கடலில் நீண்டிருக்கும். துறையின் மேல் இரண்டு பாதைகளில் டிராலி போக்குவரத்துக்கு வசதியாக, துறை மொத்தம் 20 அடி அகலமுள்ளதாக இருக்கும். இந்தியாவின் நீளமான கப்பல் துறைகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.

மின்சார இயக்க பாரந்தூக்கிகள் (கிரேன்கள்); வாகன ரீதியான பாரந்தூக்கிகள் ஆகியவை போன்ற நவீன இயந்திர சாதனங்கள் இந்தத் துறையில் பொருத்தப்படும். டிராலிகளை இழுத்துச் செல்வதற்காக டீசல் இரயில் எஞ்சின் ஒன்றும் இங்கு வேலைசெய்துவரும்.

இவ்வேலை பூர்த்தியானவுடன், புதச்சேரி துறைமுகம், தென்னிந்தியாவில் கப்பல்களுக்கு, இடையில் தங்கும் ஒரு முக்கியமான துறைமுகமாக இருந்து வரக்கூடும்; பின்னர், ஆண்டுதோறும் சுமார் 2,00,000 டன் சரக்குகள் ஏற்றி இறக்குவதற்கான வசதி யேற்பட்டு விடும்.

இலங்கை இந்தியர் குடி உரிமைச் சட்டம்

அமுல் செய்வதில் அதிகாரிகளின் தான்தோன்றிப் போக்கு

உயர் நீதிமன்ற நீதிபதிகள் கண்டனம்

கொழும்பு, நவ. 20—

இலங்கை இந்தியர் குடி உரிமைச் சட்டத்தை இலங்கை அதிகாரிகள் அமுல் நடத்தும் விதத்தினை, இலங்கை தலைமை உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் வன்மையாகக் கண்டித்துத் தீர்ப்பு ஒன்று கூறியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

"இந்த நீதிமன்றம் அடிக்கடி கண்டித்திருந்தும், சட்டத்தை அமுல் செய்வதில், உதவி 'கமிஷனர்'கள் பகுத்தறிவுக்கு ஒத்தவகையிலோ நீதியின் அடிப்படையிலோ நடந்துகொள்வதாகத் தெரியவில்லை,"

என்று அவர்கள் இருவரும் தங்களின் தீர்ப்பில் கூறியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

குடியுரிமை மனு நிராகரிப்பு

கொழும்பைச் சேர்ந்த ஏ. சூரிய நாராயணன் என்பவர், தன்னையும் தன் குடும்பத்தையும் இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தார்; ஆனால் அவரது மனு நிராகரிக்கப்பட்டு, அவருக்கு குடி உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

அப்பீல்

அதன் பிறகு அவர் தலைமை உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்திருக்கிறார்.

அந்த வழக்கை விசாரித்த தலைமை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எச். என். ஜி பர்னாண்டே, டி. எஸ் பர்னாண்டே என்ற இருவரும் தீர்ப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து கூறியதாவது:—

"மனுதார் 1945-ம் ஆண்டு மணம் புரிந்துகொண்டார்; ஆகவே அவர் அது முதற்கொண்டு—1946-ம் ஆண்டு முதல், தம் மனைவி இலங்கையில் இடை விடாமல் வசித்து வந்ததாக மெய்ப்பிக்க வேண்டும்.

"இதற்கான ஆதாரங்களை மனுதார் தாக்கல் செய்திருந்தும் அவற்றை அதிகாரி கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், மனுவைத் தள்ளுபடி செய்தது விசித்திரம் தான்."

இறுதியில், மனுதாரருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதுடன், மனுதாரருக்கான செலவு தொகையும் தரப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மற்றுமோர் வழக்கு

அடைக்கன் என்ற தோட்டத் தொழிலாளர் தாக்கல் செய்த அப்பீலிலும், அப்பீல்தாருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

மின்சார இரயில் பாதை அமைப்பு

டில்லிக்கு ஆலோசனை வழங்க பிரெஞ்சு நிபுணர் நியமனம்

மின்சார இரயில் பாதையமைப்புத் திட்டங்கள் சம்பந்தமாக இந்திய இரயில்வேக்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக பிரெஞ்சு இரயில்வே எஞ்சினீயரொருவர் நியமிக்கப்பட்டிருக்கிறாராம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில், இந்திய இரயில்வேக்களின் மின்சார இரயில் பாதைகளின் மொத்த நீளம் இப்போதிருப்பதைப்போல் மூன்று மடங்குக்கும் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது; இதற்காக ரூ. 80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 26 கோடி மதிப்புள்ள புதிய கப்பல்கள்

கட்டித் தருவதற்கு அந்நிய நாடுகளில் 'ஆர்டர்'

புதுடில்லி, நவ. 24—

இந்திய அரசாங்கம் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு தனிப்பட்ட கம்பெனிகளுக்கு ரூ. 26 கோடி மதிப்புள்ள புதிய கப்பல்களைக் கட்டித் தருவதற்கு ஆர்டர் கொடுத்துள்ளதாம்.

ரூ. 138 கோடி செலவில் துர்காபூர் தொழிற்சாலை

ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்கிறார் மந்திரி

நூற்றுக்கணக்கான எஞ்சினீயர்கள் இங்கிலாந்திலும் ரஷ்யாவிலும் பயிற்சி பெறுவராம்

புதுடில்லி, நவ 23—

துர்காபூரில், பிரிட்டிஷ் இரும்பு உருக்குத் தொழில் அதிபர்களின் கூட்டு முயற்சியுடன் நிறுவப்படும் இரும்பு, உருக்குத் தொழிற்சாலைக்கு ரூ. 138 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது என்றும், அதற்கான ஒப்பந்தம் பிரிட்டிஷ் தொழிலதிபர்களுடன் செய்யப்பட்டாயிற்று என்றும் மக்கள் சபையில் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

300 எஞ்சினீயர்கள்

துர்காபூர் தொழிற்சாலையில் பணியாற்றுவதற்காக சுமார் 300 எஞ்சினீயர்கள் இங்கிலாந்தில் பயிற்சி பெறுவர் என்றும், இவர்களின் பயிற்சிக்கான செலவு கொழும்புத் திட்டத்தின் கீழ் தரப்படும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

பிலாய் தொழிற்சாலை

ரஷ்ய சர்க்காரின் உதவியுடன் நிறுவப்படும் பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்காக 80 எஞ்சினீயர்கள் இப்போது ரஷ்யாவில் பயிற்சி பெற்றுவருகின்றனர் என்றும், 1957—58-ம் ஆண்டில் மேலும் 109 எஞ்சினீயர்களும், 497 மேற்பார்வை அதிகாரிகளும் ரஷ்யாவில் பயிற்சி பெறுவர் என்றும் மந்திரி கூறியுள்ளார்.

இவர்களின் பயிற்சிக்கான செலவையும், ஐ. நா. தொழில் நுட்பப் பயிற்சி உதவி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் என்றும் கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

'எவரது கைப்பொம்மையாகவும் ஆகமாட்டோம்'

எகிப்தியத் தலைவர் நாசர் கூறுகிறார்

நியூயார்க், நவ. 22—

"நான் எவரது கைப்பாவையாகவும் மாறமாட்டேன்; எகிப்து, எந்த ஒரு வல்லரசின் எடுபிடியாகவும் ஆகச் சம்மதிக்கமாட்டோம்,"

என்று, எகிப்திய குடியரசுத் தலைவர் நாசர் கூறியிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு எழுத்துமூலம் அளித்துள்ள பதிலில் அவர், தான் அராபிய சாம்ராஜ்யம் ஒன்றை நிறுவ முயற்சிப்பதாயும் அல்லது அராபிய உலகினில் ஆதிக்கம் செலுத்த விரும்புவதாயும் கூறப்படுவதை மறுத்துரைத்திருக்கிறாராம்.

மீண்டும் சண்டை!

'எகிப்திலிருந்து அந்நியத் துருப்புகள் வாபசாகாவிடில் என்ன நடக்கும்?' என்ற கேள்விக்கு நாசரின் அரசியல் ஆலோசகரான அலி சாப்ரி பதிலளிக்கையில் கூறியதாவது:—

"பகை தொடர்ந்தால் என்ன நேரும் என்பது எவருக்கும் தெரியாது; உலகம், பெரியதோர் ஆபத்தில் மூழ்கும்.

"சண்டை மீண்டும் துவங்கும்; ஏனெனில், நாம் எந்த ஆக்கிரமிப்பாளரையும் நமது பிரதேசத்தில் தங்கியிருக்க அனுமதிக்க முடியாது; சண்டை விரிவடையும்—மூன்றாவது உலக யுத்தமாக உருவெடுக்கும்; யார் கண்டார்கள்? ஆனால் நாம், எந்தக்காரணத்தைக் கொண்டும் ஆக்கிரமிப்பைச் சகிக்க முடியாது."

வர்த்தக உறவும் துண்டிப்பு

பிரிட்டன், பிரான்சுடன் வர்த்தகத்தைத் துண்டித்துக்கொள்ள எகிப்து தீர்மானித்திருப்பதாக எகிப்திய வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொலைத் தொழில்

அல்ஜீரியாவில் தீவிரமாகியுள்ளது!

300 தேசியவாதிகள் ஒரே நாளில் படுகொலை

கானன்டான்டைன், நவ. 23—

உலகின் கவனம் எகிப்திலும், ஹங்கேரியிலும் திரும்பியிருக்கும் நேரத்தைப் பயன்படுத்தி, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் அல்ஜீரியாவில் தாங்கள் நடத்திவரும் கொலைத் தொழிலை தீவிரமாக்கியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது

தலைவர் கைது

அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியமான பிரதிநிதி என்று கருதப்படும் தெளம் என்ற ரேதா என்பாரைக் கைது செய்திருப்பதாகவும் பாரிசிலிருந்து ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

அல்ஜீரியாவில் தாமலெனஸ் பகுதியில் உள்ள ஆற்றங்கரையில், சுமார் 300 தேசியவாதிகளைக் கொன்று குவித்துள்ளனராம், பிரெஞ்சுத் துருப்புக்கள்!

கைத்தறிகள் இயங்க அளிக்கப்பட்ட உதவி

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 24—

கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த தறிகள் இயங்குவதற்கு நடைமுதல் மூலதனச் செலவுகளுக்காக 1956 செப்டம்பர் 30-ந் தேதி வரையில் கடன் தொகைகளாக ரூ. 6,07,00,000-த்திற்குமேல் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இத்தொகையில், மாநில சர்க்கார்கள் சுமார் ரூ. 4,20,00,000 விநியோகம் செய்துள்ளன; 1956-செப்டம்பர் 30-ந் தேதி வரையில் மொத்தம் 5,02,438 தறிகளுக்கு நடைமுறை மூலதனக் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் திட்டத்திற்கு அனுமதி தரக்கூடாதாம்!

திட்டக் குழுவிடம் கேரள சர்க்கார் முறையீடு

ஒப்புக்கொண்ட மின்சாரமும் தரமாட்டார்களாம்

திருவனந்தபுரம், நவ. 23—

'சென்னையின் பரம்பிக்குளம் திட்டத்திற்கு அனுமதி தரக்கூடாது'

என்று, திட்டக்குழுவிற்கு கேரள சர்க்கார் கடிதம் எழுதியுள்ளதாம்.

கடுமையான வாசகம் கொண்ட அக்கடிதத்தில், 'சென்னையின் திட்டத்திற்கு அனுமதி தரப்படுமானால் கேரள மாநிலத்தின் சில பெரும் நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் பெரும் அளவு பாதிக்கப்படும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

'நீர்போன்ற, கேரள மாநிலத்திற்குள்ள மிகக் குறைவான இயற்கை வளத்தை வேறு மாநிலத்திற்குத் தர இயலாது' என்றும் கேரள சர்க்கார் கூறியிருக்கிறது.

பேரம்!

வேண்டுமானல், கேரள மாநிலத்தின் தேவைக்குப் போக மிச்சம் இருக்கும் தண்ணீரை இதர மாநிலங்களுக்குத் தருவது பற்றி இதர மாநிலங்களுடன் வியாபார தோரணையில் பேரம் பேசுவதற்குக் கேரள சர்க்கார் தயாராகவிருக்கிறது என்றும் கடிதம் கூறுகிறதாம்.

மின்சாரமும்தரமாட்டோம்!

ஏற்கனவே சென்னை—திரு-கொச்சி மாநிலங்களுக்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்டபடி, 25,000 கிலோவாட் மின்சாரமும் சென்னைக்குத் தருவதற்கில்லை என்றும் கேரள சர்க்கார் கூறிவிட்டதாம்.

அரிசி தருமாறு

இந்தியாவுக்குக் கோரிக்கை

7-ல் 3 - நாடுகளுக்கு மட்டுமே உதவி தர முடிந்ததாம்

புதுடில்லி, நவ. 23—

உணவுத் தானியங்கள் சப்ளை செய்யும்படி ஏழு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கோரிக்கை வந்ததாகவும், மூன்று நாடுகளுக்கு மட்டுமே சப்ளை செய்ய முடிந்ததென்றும் உதவி உணவு அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு 17,000 டன் அரிசியும், சவூதி அரேபியாவுக்கு 1,000 டன் அரிசியும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கேரள மாநிலத்தில்

முந்திரித்தோட்ட அபிவிருத்தி

ரூ.32,50,000செலவிடுவதற்கான திட்டத்திற்கு அனுமதி

புதுடில்லி, நவ. 24—

கேரள மாநிலத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 20,000 ஏகரா பரப்பளவுள்ள காட்டுப் பகுதிகளில் முந்திரித் தோட்டங்களை சுமார் ரூ.-32,50,000 செலவில் ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உயர்தரமான முந்திரிப் 'பதியங்'களை உற்பத்தி செய்து வினியோகம் செய்வதற்காக சுமார் ரூ.-2,60,000 செலவில் முந்திரிச் செடி வளர்ப்புப் பண்ணைகள் நடத்துவதற்கான மற்றொரு திட்டத்துக்கும் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

முந்திரி சாகுபடியில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கும், சர்க்கார் நிலக் குத்தகைதாரர்களுக்கும் ஏக்கருக்கு ரூ. 150 வீதம் கடன் வழங்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதென்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி விலை ஏற்றம் சீக்கிரமே தணியும்?

டில்லி அதிகார வட்டாரங்கள் நம்புகின்றனவாம்!

புதுடில்லி, நவ. 23—

புதிய மகசூல் மார்க்கெட்டிற்கு வரும்போது உணவுப் பொருள்களின் விலை பதினைந்து நாட்களுக்குள்ளாக இறங்கிவிடும் என்று, இங்கு அதிகார வட்டாரங்கள் நம்புகின்றனவாம்!

சென்னையில் தொடர்ந்து அரிசி விலை ஏறிக்கொண்டிருப்பது பற்றி அந்த வட்டாரங்கள், 'குறிப்பிட்ட சில ரக அரிசிதான் விலை ஏற்றத்திற்கு ஆளாகியுள்ளதாகவும், அது கூட சீக்கிரமே குறைந்துவிடும் என்றும் கருத்தறிவிக்கின்றனவாம்!

அரிசி விநியோகத்தில் ஊழல் எதிரொலி

செஞ்சீனவில் பங்கீடு குறைப்பு

அரிசி விநியோகத்தில் ஊழல்கள் காரணமாக செஞ்சீனவில் அரிசிப் பங்கீடு, மாதத்திற்கு 18 அவுன்ஸ் வீதம் குறைக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய இறால் இறக்குமதி: பர்மாவில் தாராள அனுமதி

கட்டுப்பாடு நீக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 24—

இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு இறால் இறக்குமதி செய்வதற்குத் தாராள பொது லைசென்சின் கீழ் அனுமதியளிக்க பர்மிய சர்க்கார் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறதாம்!

இந்திய இறாலுக்கு பர்மாதான் பிரதான மார்க்கெட்டாக இருந்து வருகிறதென்றும், சமீபத்தில் பர்மிய சர்க்கார் விதித்த கட்டுப்பாடுகளினால் தொல்லைகள் ஏற்பட்டன என்றும் ஆனால் இப்போது அவர்கள் இறக்குமதிகளை அனுமதிக்க ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் இந்திய இறுவுக்கு (ஷ்ரிம்ஸ்) கிராக்கி அதிகரித்து வருவதாயும், கொச்சியில் மத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தி வர்த்தகத் துறையினருக்கு சர்க்கார் உதவி செய்து வருகிறார்கள் என்றும் வர்த்தக இலாகா அமைச்சர் அறிவித்தார்.

கேரளப் பகுதி தி. மு. க. கிளை நிர்வாகிகளுக்கு:

"கேரளப் பிரதேச தி. மு. கழகச் செயற்குழு அமைக்க ஒவ்வொரு கிளைக்கும் அனுப்பப்பட்டிருக்கும் பிரதிநிதிகள் பாரத்தைப் பூர்த்தி செய்து உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பிரதிநிதிகள் பாரம் கிடைக்கப் பெருத கிளைகள் உடனே தெரிவித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளவும்,"

என்று கேரள தி. மு. கழகக் கன்வீனர் தோழர் கே. எச். எம். சுபேர் அறிவிக்கிறார்.

சென்னை நகர மாணவ, மாணவிகளுக்கு:

"சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தின் மாணவர் மன்றத் துவக்க விழா டிசம்பர் முதல் நாள் நடைபெறும். அதற்குள் இம்மன்றத்தில் சேரவிரும்பும் சென்னை நகர மாணவ, மாணவியர்கள் 4 அணு உறுப்பினர் கட்டணம் செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து, மாணவர் மன்றம் வளர உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்," என்று மேற்படி கழகச் செயலாளர் தோழர் தனபால் அறிவிக்கிறார்.

சபைத் தலைவருக்கு அறிமுகமில்லாத அமைச்சர்!

புதுடில்லி, நவ. 23—

"புதிதாக ஒரு மந்திரி நியமிக்கப்பட்டால் அவர் சர்க்கார் சார்பில் கேள்விக்குப் பதிலளிக்கத் துவங்குமுன் சபை உறுப்பினர்களுக்கும் சபைத் தலைவருக்கும் அறிமுகம் செய்துவைக்கப்படும் பழக்கம் இனி ஏற்பட்டாக வேண்டும்"

என்று, சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அவர் இப்படிக் கூறியதற்குக் காரணம், புதியதாக நியமிக்கப்பட்டுள்ள மந்திரி ஒருவர், அவருக்கு அடையாளம் தெரியாமற் போனதே!

சமுதாய அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்டுள்ள மந்திரியான எஸ். கே. டே என்பார், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்க முற்பட்டார்; ஆனால் இந்த 'மனிதர்' யார் என்பது சபைத்தலைவருக்குத் தெரியவில்லை!

வாழ்க அகிம்சை!

நல்ல தேகத் திடமுள்ள அரசாங்க ஊழியரையோ அல்லது அரசாங்க அத்தியாவசிய நிறுவனத்தின் சிப்பந்தியையோ பிரதேசப் படையில் சேர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கும் ஒரு பிரதேசப் படை திருத்த மசோதா மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது.

இந்தியாவில் கனரகத் தொழிற்சாலைகள்

சில புள்ளி விவரங்கள்

மின்சார சாமான்கள், இயந்திரங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் 101 தொழிற்சாலைகள் இந்தியாவில் இருக்கின்றன.

இவற்றுள் 89 தொழிற்சாலைகள் இந்தியருக்கே சொந்தமானவை. மற்ற 12 தொழிற்சாலைகளும் அந்நிய நிறுவனங்களால் முழுவதுமாகவோ, பகுதியாகவோ நடத்தப்பட்டு வருபவை.

இத்தொழிற்சாலைகள் அனைத்திலுமாகப் போடப்பட்டுள்ள மொத்த மூலதனம் சுமார் 15-கோடி ரூபாய்! இதில், இந்தியருக்கல்லாத மற்ற 12 தொழிற்சாலைகளில் மட்டும் போடப்பட்டுள்ள மூலதனம் ரூ. 4 55,00 000!

இத்தகவல்களையெல்லாம் டில்லி மாநிலங்கள் சபையில் கனரகத் தொழில் அமைச்சர் எம் எம் ஷா தெரிவித்துவிட்டு, மேலும் இது சம்பந்தமான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், புள்ளி விவரச் சேகரிப்பு முடிவானதும் அவை சபையில் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

கோலார் தங்கவயல்

தேசிய மயமாக்கும் வேலையில் தொடர்ந்து ஈடுபட அனுமதி

பங்களூர், நவ 23—

கோலார் தங்கவயலை தேசிய மயமாக்கும் வேலையில் தொடர்ந்து ஈடுபடுமாறும் தேவையான அளவு பண உதவி தருவதற்குத் தயார் என்றும் டில்லி சர்க்கார் அறிவித்திருக்கின்றனர் என்று மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார்.

குருடர், செவிடரிடை வேலையில்லா திண்டாட்டம்

குருடர் செவிடர்களைக் குறித்து நாட்டில் பலமான வெறுப்பு ஏற்பட்டிருப்பதாகவும், உண்மையில் அவர்கள் மற்றவர்களைப்போல வேலை செய்யும் திறமையுடையவர்கள் என்றும், எனவே, நாட்டில் குருடர், செவிடரிடை நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி சர்வே' நடத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் உதவி கல்வி அமைச்சர் டாக்டர் மாலி, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை உலகின் இரகசியங்கள்

கண்டறிவதற்கு புது அணு இயந்திரம்

நியூயார்க், நவ. 25—

இங்குள்ள புரூக்ஹாவன் தேசியப் பரிசோதனைசாலையில் ஒரு புது அணு இயந்திரம் அமைக்கப்பட்டு வருகிறது. அணுவை உடைப்பதற்கும் அணுவை உண்டு பண்ணுவதற்கும், இயற்கை உலகின் அடிப்படை இரகசியங்களை ஊடுருவிப் பார்ப்பதற்கும் இந்த இயந்திரம் பயன்படும்.

கிழக்கில் ஒன்பது முக்கிய சர்வகலாசாலைகள் அடங்கிய நிறுவனமொன்று, அணுசக்தி கமிஷனுக்காக இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிர்வகித்து வருகின்றது

சுமார் மூன்று ஆண்டுகளில் முடிவடையக்கூடிய இப்புதிய இயந்திரம், அணுக்களை அவைகளின் பல்வேறு பாகங்களாகப் பிரிப்பதுடன், மற்ற கோளங்களிலிருந்து பூமியைத் தாக்கும் காஸ்மிக் கதிர்களில் சில சமயங்களில் அபூர்வமாகக் காணப்படும் அடிப்படை பொருட்கள் உள்பட, தெரிந்தவையும் தெரியாதவையுமான பல்வேறு அணுப் பொருட்களை உருவாக்கும்.

இந்த இயந்திரம் பொருளை சக்தியாக மாற்றுவதுடன், அதே நேரத்தில் சக்தியிலிருந்து பொருளையும் உருவாக்கும். அது புரோட்டான்கள், நியூட்ரான்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன், இயற்கை உலகை இணைக்க வைக்கும் 'காஸ்மிக் சிமெண்டு' என நம்பப்படும் 'மெசான்'களையும் உற்பத்தி செய்யும்.

இதைத் தவிர, இவைகளுக்கு எதிராகவுள்ள எதிர்ப்புப் புரோட்டான்கள், எதிர்ப்பு நியூட்ரான்களையும் உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது; இவை எதிர் பொருட்களின் அடிப்படை அமைப்புளாகும்.

இயற்கை உலகிலுள்ள எல்லாப் பொருட்கள், சக்தி ஆகியவற்றின் 99 சதவிகிதத்துக்கு அதிகமான அளவு இடம் பெற்றுள்ள வியாபகமான அணு உலகத்தில் கவனம் செலுத்த, இந்த இயந்திரம், 'அணு மைக்ரோஸ்கோப்' ஆகப் பயன்படும்.

உண்மையாகவா?

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை நேரங்களையும் ஓய்வு நேரங்களையும் நிர்ணயிப்பது சம்பந்தமாக, 'குறைந்தபட்சக் கூலி விகிதங்கள் பற்றிய மத்திய ஆலோசனை போர்டு' சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறதாம்.

மாஸ்கோவிலுள்ள குழந்தை இலக்கியப் பிரசுராலயத்தார் சென்ற மாதம் சுமார் ஒரு கோடி 20 இலட்சம் புத்தகங்களை வெளியிட்டார்களாம்!

****

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே விறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானல், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானல், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

கணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
23--11--56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

நிதி அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்' இராயபுரம், சென்னை-13

****

நடிப்பு - இசைப் புலவர் இராமசாமி அவர்களுக்கு வரவேற்பும் பாராட்டும்

'அறிவக'த்தில் அண்ணு தலைமையில் தேநீர் விருந்து

சென்னை, நவ. 26—

அண்மையில் மலேயா, சிங்கப்பூர் நாடுகளில் வெற்றிகரமான கலைப்பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்பியுள்ள நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களை வரவேற்கவும் பாராட்டவுமாக தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், நேற்று மாலை 5-15 மணியளவில், 'அறிவக'த்தில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது.

அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்த விருந்துக்கு கழக முன்னணி வீரர்கள் பலரும் வந்திருந்தனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'நடிப்பிசைப் புலவர் மலேயாவி லிருந்து பணத்தோடு திரும்பாவிட்டாலும், நல்ல புகழோடு திரும்பியிருக்கிறார்' என்று குறிப்பிட்டு, 'அவரது வெற்றிகரமான கலைப் பணி, மலேயா மக்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை புரியும்' என்றுகூறி, அண்ணு அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் வழிமொழிந்தார்.

அண்ணு அவர்கள் நடிப்பிசைப் புலவருக்கு மாலை அணிவித்தார்.

தலைமையுரை ஆற்றுகையில் அண்ணு அவர்கள், 'ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொள்வது கஷ்டமானதாயிருக்கும்' என்று கூறிவிட்டு, 'நண்பர் இராமசாமி அவர்களின் வெற்றி நம் அனைவரின் வெற்றியாகும்' என்றுகூறி, இராமசாமி அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி, 'அவர் தொடர்ந்து தாயக மக்களுக்கு நெடு நாட்கள் பணியாற்ற வேண்டும்' என்றும் வாழ்த்ததலைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், எம். ஜி. ஆர் நாடக மன்றத்தின் சார்பில் நடிப்பிசைப் புலவருக்குக் கைத்தறி ஆடை அணிவித்து, 'நானும் இராமசாமி அவர்களும் குழந்தைப் பருவமுதலே நாடகத் துறையில் ஒன்றுபட்டுப் பணியாற்றி வருபவர்கள்' என்றுகூறி, 'மீண்டும் இருவரும் தி. மு. கழகம் எனும் குடும்பத்தில் ஒன்றுபட்டுப் பணியாற்றுவது மிக மகிழ்ச்சி தருவதாகும்; இராமசாமி அவர்களின் வாழ்வும் தாழ்வும், நமது வாழ்வும் தாழ்வுமாகும்' என்றும் கூறி, இராமசாமி அவர்களைப் பாராட்டினர்கள்.

இறுதியாக நடிப்பிசைப் புலவர் அவர்கள், தனக்கு விருந்து உபசாரம் ஏற்பாடுசெய்து பாராட்டிய தமக்கு தலைமை நிலையத்திற்கும், பொதுச்செயலாளருக்கும் அண்ணு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

★

தோழர் ஈ. வெ. கி. சம்பத் பாராட்டு

சென்னை, நவ. 26—

அண்மையில் மலேயா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்று, பகுத்தறிவு நாடகங்கள் பலவற்றை நடத்தி, வெற்றிகரமான கலைப் பணியாற்றித் தாயகம் திரும்பியுள்ள நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு நேற்று மாலை 6-30 மணியளவில், சென்னை 5-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், கொருக்குப் பேட்டை இரயில் நிலையத்திற்கு அருகில் ஓர் மாபெரும் பாராட்டு விழாக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

வட்டச்செயலாளர் நலங்கிள்ளி முன்மொழிய தோழர் மோகனன் வழிமொழிய கூட்டத்திற்குத் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர்.

தலைவர் முன்னுரைக்குப்பின் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்குப் பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் பாராட்டு, வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

அடுத்து நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் மலாயாவில் நமது கழகக் கருத்த மைந்த நாடகங்கள், அங்குள்ள மக்களின் அறியாமையை, மூடப் பழக்கங்களை விரட்டுவதற்கு எத்தனை தூரம் பயன்பட்டன என்பதை விளக்கியும், அங்குள்ள மக்களின் நிலை பற்றியும் சுருக்கமானதோர் சொற்பொழிவாற்றினர்.

கூடியிருந்த மக்களின் வேண்டுகோளுக்கு ஒப்ப, ஒரு பாடலும் பாடினர்.

அடுத்து, தோழர் ஈ. வே கி சம்பத் அவர்கள் நடிப்பிசைப் புலவரைப் பாராட்டியும், கடந்த ஐந்தாறு மாதங்களாக, நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு மேற்கொண்டபின்பு நம்மைப்பற்றி மாற்றார் கூறிவரும் பழிகளுக்குத் தக்க பதில் தந்தும், நமது தேர்தல் பிரவேசம் எத்தனை அவசியமானது என்பதை விளக்கியும் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

தோழர் சம்பத் அவர்களுக்கும் நடிப்பிசைப் புலவருக்கும் ஏராளமான கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது. (ந-சி.)

அழகிரி மன்ற 2-ம் ஆண்டு விழா

அண்ணு சொற்பொழிவு

சென்னை, நவ. 26—

சென்னை 7-வது வட்டம் அழகிரி மன்றத்தின் 2-ம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், 24—11—56 மாலை 6-30 மணியளவில், மூலக் கொத்தளம் அம்மன் கோவில் மைதானத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள்—எண்ணற்ற தாய்மார் உட்பட திரண்டிருந்தனர்.

கூட்டத்தை ஒட்டி, பேட்டை முழுதும் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கூட்டத்திற்கு, தோழர் வேந்தன் முன்மொழிய தோழர் துரை செல்வராசன் வழிமொழியதோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் தலைமை தாங்கினர்கள்.

தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் துரை அரசன், சி. ஆர். பாலசுந்தரம், சி. வி. இராசகோபால் ஆகியோர் சிறிதுநேரம் பேசினர்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் இன்றைய நிலைகளை விளக்கியும், கழக இலட்சியத்தை எடுத்துரைத்தும் பேசியபின் அண்ணு அவர்கள் தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதையும், கழகத் தோழர்கள் உடனடியாகச் சேகரித்துத் தரவேண்டிய நிதி பற்றியும், மற்றும் கழகக் கொள்கைகளை விளக்கியும் அரியதோர் சொற்பொழிவாற்றினர்கள்.

அண்ணு அவர்களிடம் தேர்தல் நிதியாக ரூ. 50 தரப்பட்டது.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. - சி)

கழகக் கூட்டங்கள்

★

சிருவந்தாடு :
28—11—56 மாலை 6-மணிக்கு
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
வி. கிருஷ்ணமூர்த்தி

★

மதுரை :
(கீழமார்க்கெட்) அண்ணுதிடலில்
27—11—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
எஸ். முத்து எம் சி.
கே. எஸ். சந்தானம்

சென்னை—இராயபுரம்
கே.வி.கே. சாமி நினைவு மன்ற
உறுப்பினர்கட்கு :

28—11—56 மாலை 6½ மணிக்கு மேற்படி மன்றப் பணிமனையில் (60-ஏ. ஆதம் சாயபு தெரு) செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும்.

***

தேர்தல் நிதிக் கலை நிகழ்ச்சி

★

சென்னையில் டிசம்பர் 9-ல்!

தோழர்கள்

கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி

ஆகியோர் அளிக்கும்

கலை விருந்து

ஏற்பாடாகி வருகிறது !

★

கலைவிருந்து பெறுவீர் ! காணிக்கை தருவீர் !!

டிசம்பர் 9! டிசம்பர் 9!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

***

தபால் ஊழியரிடை பொதுச்செயலாளர்

சங்க ஆண்டு விழாவில் சொற்பொழிவு

சென்னை, நவ. 26—

அகில இந்திய தபால் ஊழியர் சங்கம் (மூன்றாம் பிரிவு) சென்னை பி எம். ஜி அலுவலக ஊழியர் கிளைச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா, 23—11—56 மாலை, அலுவலக மைதானத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் ஜெகன்னாத ராஜா அவர்கள் அனைவரையும் வரவேற்று, சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி இவை குறித்து விளக்கம் தந்து பேசினர்.

அடுத்து, சங்கச் செயலாளர் வி ஆர். சௌந்தரராஜன் அவர்கள், தபால் ஊழியரின் இன்றைய நிலையையும் அவர்களது கோரிக்கைகளையும் விளக்கிப் பேசினர்.

சங்கத் தலைவர் முன்மொழிய—செயலாளர் வழிமொழிய கூட்டத்திற்கு டி. புருஷோத்தம் எம் எல்.சி. அவர்கள் தலைமை தாங்கி, தபால் ஊழியரின் நிலை பற்றி சங்கத் தலைவரும் செயலாளரும் கூறியனவற்றை தாம் முழு மனதுடன் ஒப்புவதாகவும், அவர்களது கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை என்றும் எடுத்துரைத்தார்.

அடுத்தாற்போல், தோழர்கள் கே. விஜயம் எம்.எல். ஏ, டி வி. ஆனந்தம் (தென் பிராந்திய இரயில்வே தொழிலாளர் சங்கம்), திரு. சாரி (பி எம். ஜி.) ஆகியோர் பேசியதும், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் தபால்—தந்தி ஊழியர் சங்கத்தின் சீரிய முயற்சிகளைப் பாராட்டியும், கோரிக்கைகளை விளக்கியும் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுச்செயலாளர் அவர்களுக்கும் இதரர்களுக்கும் சங்கத்தின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில், ஆயிரத்திற்கு மேற்பட்ட தபால் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

செஷன்ஸ் விசாரணைக்கு உத்தரவு

கே. வி. கே. சாமி கொலை வழக்கில், நகர சப்-மாஜிஸ்திரேட் பட்டாபிராமன், இரு அப்ரூவர்களை நீக்கி, பின்வரும் 9 எதிரிகளையும் செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பி உத்தரவு பிறப்பித்தார்.

சந்தியாகு, பொன்னுசாமி தேவர், ஆதிநாடார், கே. பெருமான், எஸ். பெருமான் நாடார், எஸ். தங்கப்பழம், பாண்டிதேவர், ஜெகந்நாதன், டி. பொன்னையா.

எதிரி பெருமாள் நாடாருக்கு அளிக்கப்பட்டிருந்த ஜாமீனை மாஜிஸ்திரேட் ரத்து செய்து விட்டார்; இரா. சு தங்கப்பழம் மட்டுமே ஜாமீனில் இருக்கிறார்.

எதிரிகளின் வாக்குமூலம்

எதிரி பெருமான் வாகுமூலம் அளிக்கையில் தனக்கும் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்றும், சாமியை வெட்டவேண்டும் என்று தான் கூறியதில்லை என்றும், சாமி இறந்தது கேள்விப்பட்ட பிறகு தான் தனக்குத் தெரியும் என்றும் தனக்கும் சாமிக்கும் தகராறு எதும் கிடையாது என்றும், தேர்தலில் தன்னை எதிர்த்து சாமி வெற்றி பெற்றதும் உண்மைதான் என்றும் கூறினர்.

எதிரி பொன்னுசாமி வாக்குமூலம் அளிக்கையில், கொலையைப்பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறினர்.

அடுத்து எதிரி தங்கப்பழம் வாக்குமூலம் அளிக்கையில் தனக்கு சாமி இறந்தது மறுநாள் காலையில்தான் தெரியும் என்றும் தனக்கும் சாமிக்கும் மனவருத்தம் இல்லை என்றும், சாமிக்கும் தனக்கும் சிறையில் அடிதடி நடக்கவில்லை என்றும், தேர்தலில் சாமிக்கு எதிராக தான் வேலை செய்யவில்லை என்றும் தான் இது வரை தலைமைக்கோ, பதவிக்கோ ஆசைப்பட்டதில்லை என்றும், சாமிக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் பகை உண்டென்றும், கடந்த ஒரு வருட காலமாக தான் தூத்துக்குடியில் அதிகமாக இருந்ததில்லை என்றும் கூறினர்.

அடுத்து எதிரி பாண்டியதேவர் வாக்குமூலம் அளிக்கையில், சாட்சிகள் பொய்சொல்லுவதாகவும் தனக்குக் கொலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்றும் கூறினர்.

அடுத்து ஜெகந்நாதன் வாக்குமூலம் அளிக்கையில், சாட்சிகள் பொய் சொல்லுவதாகக் கூறினர்.

இதற்கு முன்னர், போலீஸ் தரப்பில் சாட்சியமளித்த மாடசாமி நாடார், தான் இருப்பது மணிமுத்தாறு என்றும், சொந்த ஊர் தூத்துக்குடி என்றும், எதிரிகளான பெருமான், சந்தியாகு, பொன்னுசாமி ஆகியோர் எதிர்பாராது வந்து அவரிடம் தங்குவதற்கு உதவி கேட்டதாகவும், தொடர்ந்து பொன்னுசாமி, வெங்கடாசலமும் வந்ததாகவும், எல்லோருக்கும் ஒரு தனி அறையில் வசதி செய்து கொடுத்ததாகவும், பிறகு போலீசார் தீவிரமாகத் தேடுவதாகக் கேள்வியுற்றுக் காலையில் எல்லோரையும் அனுப்பிவிட்டதாகவும் கூறினர்.

***

பிரிட்டனுடன் தான் செய்துள்ள ஒப்பந்தத்தை ஜோர்டான் ரத்து செய்துவிட்டால், தேவையான பண உதவியை அந்நாட்டிற்கு அளிப்பதாக சவூதி அரேபிய மன்னர் வாக்களித்துள்ளாராம்.

***

அடையாளபூர்வமாக வெளியேறுகின்றன !

பிரிட்டிஷ், பிரெஞ்சுத் துருப்புகள் போர்ட் செய்த்திலிருந்து அடையாளபூர்வமாக வெளியேற ஆரம்பித்துவிட்டனவாம். சர்வதேசப் போலீஸ் படை போர்ட் செய்த்திற்கு வந்துள்ளது.

***

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.